# Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

**(15 September 2017/23 Dhul Hijjah 1438 Hijira)**

## SURA AN-NASR (Chapter - 110)

## சூரத்துந் நஸ்ர் (அத்தியாயம் - 110)



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஸஹ்ஹுதும் தஅவசும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருபெயரால்
2. அல்லாஹ்வுடைய உதவியும் வெற்றியும் வரும் போதும்,
3. மேலும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் அணியணியாகப் பிரவேசிப்பதை நீங்கள் காணும் போதும்,
4. உம்முடைய இறைவனின் புகழைக்கொண்டு துதித்துக் கொள்வீராக! மேலும் அவனிடம் பிழைப் பொறுக்க தேடுவீராக. நிச்சயமாக அவன் பாவமன்னிப்புக்கோருதலை ஏற்றுக் கொள்பவனாகயிருக்கின்றான்.

மேற்கூறிய திருமறை வசனம், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதியாக பெற்றுக் கொண்ட வெளிப்பாடாகும. அதாவது அன்னாரின் வபாத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு கிடைத்த வெளிப்பாடு வசனமாகும். இந்த இறை வெளிப்பாட்டை அன்னார் பெற்றுக்கொண்டது, தம் இறுதி ஹஜ்ஜுக்காக மக்காவில் இருந்த போதோ, அல்லது மதீனாவில் திரும்ப வந்த போதோ ஆகும். ஒரு கடமையினை மிக அழகாகவும் முழுமையாகவும் நிறைவேற்றிக்கொள்ளும் பொழுதே அதன் வெற்றி வந்தடைவது. மட்டுமின்றி இது, அல்லாஹ்வின் மீதான கடமைகளை நிறைவேற்றிக் கொண்டதன் விளைவேயாகும். இத்தகைய வெற்றிகளுக்கு நாம் நம் கடமைகளை கௌரவத்துடன் நிறைவேற்றிட வேண்டும். அனைத்து வெற்றிகளும் அல்லாஹ்வின் உதவியின்றி கிடைப்பதில்லை. எப்பொழுதும் நேர்வழியிலிருந்து, நற்செயல்கள் புரிகின்றோர்களுக்கு அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் மிக அருகாமையிலிருக்கும். அல்லாஹ்விடவும் அவனது தூதரிடவும் நம் ஆன்மாவு இணைந்திருக்கும் பொழுதும், என்ன தான் நிகழ்ந்தாலும் அவர்கள் ஒற்றுமையுடன் பொய்மைக்கு

எதிராகவும் அவநம்பிக்கையாளர்களுக்கு எதிராகவும் போராடுவார்கள். அவர்களின் அனைத்து ஆற்றல்களையும் கொண்டு அவர்கள் போராடுவார்கள். அப்போராட்டத்தில் அவர்கள் நிச்சயமாகவும் வெற்றியடைவார்கள். இத்தகைய வெற்றிகள் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றது. அல்லாஹ்வின் உதவியினை மட்டுமே நாம் எப்போதும் நாட வேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் நமக்கு பாதுகாவலனாக அல்லாஹ் மட்டுமே உள்ளான். நாம் அவன்பால் நேர்மையுடன் திரும்பவேண்டும்.அந்நேரம் கருணையுடனும் இரக்கத்துடனும் அவன் நம் பால் திரும்பிக்கொள்வான்.

இந்த அத்தியாயம் மூலம் அல்லாஹ் நமக்கு அளித்திருக்கும் ஒரு அறிகுறியாவது, ஏக இறைகொள்கையில் நாம் நேர்மையுடன் இருக்கவேண்டும் என்றாகும். என்னதான் நிகழ்ந்தாலும் அவன் மட்டுமே முழுமை பெற்ற உரிமையாளன். அனைத்தும் அவனது விருப்பத்திற்கு உகந்தவா் செயல்படுகின்றது. அல்லாஹ்வின் உதவியின்றி நமக்கு வெற்றிபெற இயலாது. ஆகவே நம் அனுதின வாழ்க்கையில் அவன் நமக்கு உதவிபுரியும் பொழுது, அது கவலைக்குரிய கட்டத்திலாகலாம், அல்லது சோதனைக்குரிய கட்டத்திலாகலாம் , மகிழ்ச்சிக்குரிய கட்டத்திலாகலாம் எல்லா கட்டங்களிலும் நாம் அல்லாஹ்விடம் பணிவுடன் இருக்க வேண்டும். நமது அனைத்து வகைப்பட்ட பாவங்களையும் மன்னித்துக் கொள்வதற்கு அவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். எப்போதெல்லாம் நாம் வெற்றியடைகின்றோமோ அப்போதெல்லாம் நாம் அல்லாஹ்வை நினைவு கூர வேண்டும். அது பௌதீக வாழ்க்கையிலாகட்டும், அல்லது ஆன்மீக வாழ்க்கையிலாகட்டும், அது மகிழ்ச்சிக்குரிய கட்டத்திலாகட்டும் அல்லது கவலைக்குரிய கட்டத்திலாகட்டும்! எல்லா கட்டங்களிலும் **“அல்ஹம்துலில்லாஹ்”** என்று கூறும் கலாசாரத்தை நாம் வளர்க்க வேண்டும். காரணம் அவன் நம் மீது எப்பொழுதும் அருள்களை பொழிகின்றான், உதவி

புரிகின்றான். அதைப்போலவே எப்போதாவது நமக்கு துரதிர்ஷ்டம் வந்து சேர்ந்தால் நாம் **“இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன்”** என்று கூறவேண்டும். ( நாம் அனைவரும் அல்லாஹ்விடமிருந்து வந்தவர்களும், நாம் ஒரு நாள் அவனிடம் திரும்பி செல்பவர்களும் ஆவோம்.)

**வசனம் 2,3**

**அல்லாஹ்வுடைய உதவியும் வெற்றியும் வரும் போதும்,**

**மேலும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் அணியணியாகப் பிரவேசிப்பதை நீங்கள் காணும் போதும்,**

உண்மையை நிராகரித்துக் கொண்டவர்களின் துன்புறுத்தல் காரணமும், அவர்கள் அன்னாரை கொலை செய்வதற்கு சதி திட்டம் தீட்டிய காரணத்தைக் கொண்டும் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவில் அடைக்கலம் தேடிச்சென்றார். மதீனாவை சார்ந்த நேர்மையாளர்களும் ஞானிகளும் அன்னாருடன் இணைந்தனர். அல்லாஹ் அவர்களின் நம்பிக்கைக்கும், அவர்களின் ஆரம்ப முயர்ச்சிக்கும் ஆற்றல் அளித்தான்

மக்காவை சார்ந்தவர்களுக்கு எதிராக போராடுவதில் அவர்கள் வெற்றியடைந்தனர். மக்காவை சார்ந்த அனைவரும் அன்னாரை அழித்துக்கொள்வதற்கு ஒன்றிணைந்தனர். ஆனால் முடிவின் அன்னாருக்கு மக்காவில் மாபெரும் வெற்றியை அல்லாஹ் அளித்தான். அதற்கு பின் மக்காவை சார்ந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இஸ்லாமை ஏற்றுக்கொண்டனர். மக்கா வெற்றி என்பது, நீண்ட வருடங்கள் பொறுமையுடன் செயல்பட்டுக்கொண்டதன் விளைவாகும். அன்னாருக்கு நபி பதவி அளித்து, கண்ணியப் படுத்தி கொண்ட நாள் முதல் செய்த செயல்களின் இறுதி வெற்றியாகயிருந்தது மக்கா

வெற்றி. அல்லாஹ் அவனது தூதருக்கு அளித்த வாக்குறுதியை கடைபிடித்தான். மக்கா வெற்றியை தொடர்ந்து அரேபியன் கோத்திரங்கள்யாவும் இறைவனின் ஏகத்துவத்தின் முன்பு கீழ் பணிந்தனர். இஸ்லாமின் நற்செய்திக்கு கட்டுப்பட்டனர். மேலும் உலகின் நான்கு திசைகளிலும் அந்த தூது செய்தி பரவிக்கொண்டது.

இந்த வசனங்களிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய பாடம், வெற்றிபெறும் வேளைகளில் ஒரு மனிதன் தற்பெருமைக்காட்டக் கூடாது என்றாகும். மாறாக அவர் மிக பணிவுடன் இருக்கவேண்டும். மனிட குலத்திற்க்கு அனைத்தும் தொண்டு புரிவேன் என அவர் வாக்குறுதியளிக்க வேண்டும். காரணம் ஒரு உண்மையான முஸ்லீமின் இலட்சியம், இறைவனுடையவும் இறைதூதருடையவும் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு கொள்ள வேண்டும் என்பதாகும். அவ்வாறு செய்தால் அது அவரது ஆன்மாவின் நன்மைக்காகவே அவர் செய்கின்றார். காரணம் ஒவ்வொரு மனிதனும் இறைசாராம்சத்தில் பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

**வசனம் 4**

**"உம்முடைய இறைவனின் புகழைக்கொண்டு துதித்துக் கொள்வீராக! மேலும் அவனிடம் பிழைப் பொறுக்க தேடுவீராக. நிச்சயமாக அவன் பாவமன்னிப்புக்கோருதலை ஏற்றுக் கொள்பவனாகயிருக்கின்றான்"**

ஒவ்வொரு மனிதனும் இறைவனிடம் மிக பணிவுடனிருக்கவேண்டும். அவரது பலவீனங்கள்யாவும் அவர் சுயம் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் அவர் அல்லாஹ்வின் அருகாமையை அடைந்துவிடும் வழிகளைத் தேடிக்கொள்ளவேண்டும். அவர் செய்யும் செயல்களுக்கான கூலியை அல்லாஹ்விடம் மட்டும் கேட்கவேண்டும்.

நிச்சயமாகவும் அல்லாஹ் அவனது நன்மையையும் இரக்கத்தையும் அந்த நபர் மூலமாக வெளிப்படுத்தியிருக்கின்றான். அல்லாஹ்வின் நபி என்ற நிலையில் அவருக்கு பூர்த்தி செய்ய வேண்டிய மற்றொரு கௌரவமான கடமை, தம் மக்களின் மன்னிப்புக்காகவும் செழிப்புக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும என்பதாகும். வெற்றியடையும் வேளைகளில் தோழர்களில் எவராவது தவறு செய்திருந்தால் அதற்காக பாவ மன்னிப்பு கோர வேண்டும். அல்லாஹ் அவனது மாபெரும் அருளை நமக்காக வழங்கியிருக்கின்றான். நம் அனைத்து குற்றங்களுக்கும் அவன் மன்னிப்பளிப்பவனாகயிருக்கின்றான். எந்தவித மிரட்டலுமின்றி, நாம் அனைவருக்கும் அவன் பாதுகாப்பை அளித்திருக்கின்றான். அவன் அவ்வாறு செய்வது அவனது படைப்பினங்களுக்காக அவன் வைத்திருக்கும் அவனது கருணைமூலமாகும். அவனது துணையின்றி, நமக்கு ஒரு போதும் வெற்றியடைய ஆகாது. அல்லாஹ்வின் அடியார்கள் என்ற நிலையில் நாம் எப்போதும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக்காக மன்றாடிக்கொண்டிருக்க வேண்டும். செய்த தவறுகளை மேலும் ஒரு போது நான் செய்ய மாட்டேன் என்ற உறுதியுடன் பாவமன்னிப்பு கோர வேண்டும். இன்ஷா அல்லாஹ் **“எவர் பயபக்தியுடையவராக இருக்கின்றார்களோ, அவர்களுடனும், எவர் நற்செயல் புரிகின்றார்களோ அவர்களுடனும் அல்லாஹ் இருக்கின்றான்.” (16 – 129)**

அவன் பொழிந்துக் கொண்டிருக்கும் அருட்களுக்காக எந்நாளும் அல்லாஹ்விடம் நன்றிசெலுத்துபவராகயிருக்க அவன் நமக்கு துணைபுரிவானாக! இன்ஷா இல்லாஹ்! அவனது வழியில் நாம் அடையும் அனைத்து வெற்றிகளையும் பணிவுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதில் எவ்வித பகட்டும் இருக்கக் கூடாது. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Published by:**

Jamaat Ul Sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817

**Issued by:**



**K. Nazeer,**
**State Amir - Tamil Nadu, India**
**Jamaat Ul Sahih Al Islam**